ඩිජිටල් ආර්ථික අමාත්‍යාංශය
டிஜிட்டல் பொருளாதார அமைச்சு
MINISTRY OF DIGITAL ECONOMY

පුද්ගලයන් ලියාපදිංචි කිරීමේ දෙපාර්තමේන්තුව
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்
DEPARTMENT FOR REGISTRATION OF PERSONS

10 වන මහල, සුහුරුපාය, ශ්‍රී සුභූතිපුර පාර, බත්තරමුල්ල.
10 ஆம் மாடி,சுஹுருபாய, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.
10th Floor, Suhurupaya, Sri Subhuthipura rd, Battaramulla.

මගේ අංකය / எனது இல. / My Ref. DRP/OP/01/DS/03(වෙළුම V ) | ඔබේ අංකය / உமது இல. / Your Ref. | දිනය / திகதி / Date 2025.03.

"විශ්වසනීය පුද්ගල අනන්‍යතාව හැඳුනුම්පතයි" "அடையாள அட்டை - நம்பகத்தன்மையான தனிநபர் அடையாளம்" "Identity Card, the Trusted Personal Identity"

சகல பிரதேச செயலாளர்களுக்கும்,

<u>திணைக்கள ஒருநாள் சேவைக்கு விண்ணப்பதாரர்களை அனுப்பி வைத்தல்.</u>

மேற்குறித்த விடயம் தொடர்பாக DRP/OP/01/DS/03 (වෙළුම IV) ஆம் இலக்கம் மற்றும் 2022.03.10ஆந் திகதிய கடிதத்திற்கு மேலதிகமாக..

02. அந்த கடிதத்தின் மூலம், விண்ணப்பதாரர்களை ஒரு நாள் சேவைக்கு அனுப்பும்போது விண்ணப்பதாரர் அங்கவீனம் / நோய் போன்ற சிறப்பு காரணங்களால் சமூகமளிக்க முடியாத சந்தர்ப்பங்களில் தாய் / தந்தை / மகள் / மகன் / சகோதரன் / சகோதரி / கணவன் / மனைவி போன்ற உறவினர்களுக்கு மாத்திரமே குறித்த படிவத்தினூடாக அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டு அனுப்புமாறு தயவாய் தெரிவித்துக்கொள்கிறேன்.

03. இருப்பினும், கிராம அலுவலர்கள் மூலம் குறித்த படிவத்தின்படி அதிகாரம் அளித்தல் இல்லாமல் மற்றும் விண்ணப்பதாரரின் நெருங்கிய உறவினர்கள் அல்லாத உறவினர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்காக திணைக்களத்தின் ஒரு நாள் சேவைக்கு அனுப்பப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது.

04. எனவே, விண்ணப்பதாரர் சமூகமளிக்க முடியாத அங்கவீனம் / நோய் போன்ற விசேட சந்தர்ப்பங்களில் மாத்திரம் குறித்த படிவத்தினூடாக அதிகாரம் பகிர்ந்தளிப்பதற்கு, உறவுமுறை சரியாக உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே அதிகாரம் அளித்தல் கடிதத்தை வழங்குமாறு தங்கள் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சகல கிராம உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்துமாறு தயவாய் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது தொடர்பில் தாங்கள் நல்கும் ஒத்துழைப்பினை மேலாகக் கருதுகின்றேன்.

**எம்.எஸ்.பீ.சூரியப்பெரும**
ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம் (ப.க)

**பிரதிகள் :**

01. செயலாளர், டிஜிட்டல் பொருளாதார அமைச்சு - தெ.கொ
02. சகல மாவட்ட செயலாளர்கள் - தெ.கொ
03. பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள ஆ.ப.தி. அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் - தெ.கொ மற்றும் உ.ந

දුරකථන / தொலைபேசி / Telephone (011) 5226100
ෆැක්ස් / பெக்ஸ் / Fax (011) 2862198
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail info@drp.lk
වෙබ් / இணையதளம் / Web www.drp.gov.lk